Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 23

வெள்ளிக்கிழமை
19 டிசெம்பர் 2025

மார்கழி 04 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50



## சுப்பர்மடம் கடற்கரையில் கரையொதுங்கிய கஞ்சா!

யாழ்., டிசெ. 19
பருத்தித்துறை சுப்பர் மடம் கடற்கரையில் கஞ்சாப் பொதியொன்று நேற்றுக் கரையொதுங் கியுள்ளது.
சுப்பர்மடம் கடற்கரை யில் மர்மப்பொதி யொன்று மிதந்து வரு வதை மக்கள் »11



# ஈழ - தமிழக மீனவர்களை பகையாளிகளாக்கச் சதி!

## அத்துமீறிய மீன்பிடியைத் தடுக்குமாறு தமிழக முதல்வரிடம் வலியுறுத்து

சென்னை, டிசெம்பர் 19

அத்துமீறிய மீன்பிடி விவகாரத்தில், ஈழ மீனவர்களையும் தமிழக மீனவர்களையும் மோதவிட்டு நிரந்தரப் பகையாளிகளாக மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே, அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவது அவசியம் என்று தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் தமிழ்த் தேசியப் பேரவை வலியுறுத்தியுள்ளது. »11

## ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்துக

### தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தமிழ்த் தேசியப் பேரவை கோரிக்கை

சென்னை, டிசெ. 19
இலங்கை அரசாங்கத்தால் உருவாக்கப்படவுள்ள 'ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பை' உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு, தமிழக முதல்வர் ஸ்டாலினிடம் தமிழ்த் தேசியப் பேரவையினர் நேற்று நேரில் »11

### டித்வா புயலின் கோரம்

## வடக்கு – கிழக்கில் விவசாயம் பேரழிவு

### ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 19
டித்வா புயலின் தாக்கம் காரணமாக, வடக்கு - கிழக்கு மாகாணங்களிலேயே விவசாயத்துறை பேரழிவை எதிர்கொண்டுள்ளது என்று ஐக்கிய நாடுகள் சபை சுட்டிக்காட்டியுள்ளது. »11

## நாட்டின் தென்பகுதியில் வளிமண்டலத் தளம்பல்

### பேராசிரியர் பிரதீபராஜா தெரிவிப்பு



யாழ்ப்பாணம், டிசெ. 19
இலங்கையின் தெற்குப் பகுதியில் வளிமண்டலவியல் தளம்பல்நிலை காணப்படுகின்றது என்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியற்துறை பேராசிரியர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்தார். »11

## நாட்டின் பொருளாதாரம் மேலும் எழுச்சியடையும்

### அமைச்சர் விஜித ஹேரத் நம்பிக்கை

கொழும்பு, டிசெ. 19
இலங்கையின் பொருளாதாரம் முன்னைய நிலையை விடவும் மேலும் எழுச்சியடையும் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.
நாடாளுமன்றத்தில் அவர் »11

## தொல். திணைக்களத்தினரால் முற்றவெளியில் எல்லைக்கல்!

### பொதுமக்கள் கடும் விசனம்

யாழ்ப்பாணம், டிசெ. 19
தொல்பொருள்சின்னங்கள் புதைந்திருக்கலாம் என்ற அடிப்படையில், யாழ்ப்பாணம் கோட்டையைச் சுற்றி வர உள்ள பகுதிகளில், தொல்பொருள் திணைக்களத் »11

### திஸ்ஸ விகாரை

## தேரரின் பதவி உயர்வை எதிர்த்துப் போராட முடிவு

### வலி.வடக்கு சபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 19
தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி ஜின்தோட்டை நந்தாராம தேருக்கு, பௌத்த கட்டமைப்பின் உயரிய அதிகாரங்களை »11





### மணல் கடத்தல்

## துப்பாக்கிச்சூடு நடத்தி சந்தேகநபர் கைது!

யாழ்ப்பாணம், டிசெ. 19
தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில், மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தி சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப் »11

முச்சந்தி முரளி

'இஞ்ச
அத்துமீறுறவைக்கும்
அடாத்தா நடக்கிறவைக்கும்
தான் அதிகாரம் கிடைக்கிற
கலிகாலம் கண்டியளோ'

## அளவுக்கு அதிக ஹெரோய்ன்; குடும்பத்தலைவர் உயிரிழப்பு!

### ஹெரோய்ன் வழக்கில் வெளிவந்து மூன்றே நாள்களில் துயரம்

யாழ்ப்பாணம், டிசெ. 19
யாழ்ப்பாணம் - நாவற்குழிப் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பத்தலைவர் ஒருவர், அளவுக்கு அதிகமான ஹெரோய்ன் நுகர்வு காரணமாக »11

## தையிட்டி திஸ்ஸ விகாரை சட்டவிரோதக் கட்டடம்!

### மும்மொழிகளிலும் அறிவித்தற்பலகை வலி.வடக்கு பிரதேசசபையில் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 19
தையிட்டி திஸ்ஸ விகாரையை 'சட்டவிரோதக் கட்டடம்' என்றுபிரகடனப்படுத்தி, மும்மொழிகளிலும் அறிவித்தற்பலகையை வைப்பதற்கு வலி.வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறை »11

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கொவிசெத**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4289 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 05 10 14 25 |
| விசேட எழுத்து | V |

**ஹந்தஹன ராசி சுப பலன்**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1356 |
| வெற்றி இலக்கினம் | துலாம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 08 32 55 |

**NLB ஜய**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0315 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 2 6 6 6 |

**மெகா பவர்**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2395 |
| ஆங்கில எழுத்து | B |
| சுப்பர் இலக்கம் | 03 |
| வெற்றி இலக்கங்கள் | 62 76 77 78 |

**மஹஜன சம்பத**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6047 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 8 0 8 4 4 7 |

**தன நிதானய**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2077 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 09 46 62 64 |
| விசேட எழுத்து | S |

**சுப தவசக்**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0163 |
| வெற்றி இலக்கினம் | விருச்சிகம் |
| வெற்றி இலக்கங்கள் | 10 25 51 |

# சர்வதேச நன்கொடையாளர் மாநாடு நடத்துவதற்கான சந்தர்ப்பம் இதுவே!

## சஜித் சுட்டிக்காட்டு



கொழும்பு, டிசெ.19

**போர் முடிவடைந்த பின்னர் சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்தவிருந்த வாய்ப்பு நழுவவிடப்பட்டது. தற்போதும் அதே தவறை செய்துவிடக்கூடாது. குறித்த மாநாட்டை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தியுள்ளார். நாடாளு மன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது- பேரிடரால் சர்வதேசப் பார்வை இலங்கை பக்கம் திரும்பியுள்ளது. இதனை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். சர்வதேசக் கொடையாளர் மாநாட்டை நடத்துமாறு பல தடவைகள் கோரிவிட்டோம். அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. அதனை விரைவில் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், அமெரிக்க ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தி, பேரிடர் நிலைமையைக் காண்பித்து 20 சதவீத வரியை மேலும் குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறைநிரப்புப் பிரேரணைக்கு நாம் ஆதரவளிக்கின்றோம். பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து உறுதிமொழிகளும் நிறைவேற்றப்படவேண்டும். இதற்காக வலுவானதொரு பொறிமுறை ஸ்தாபிக்கப்பட வேண்டும்- என்றார். (ச-44)

**சுபிரி தன சம்பத**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0755 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 0 8 1 3 8 6 |

**Super Ball DLB**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 3021 |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 32 43 61 76 |

**சனிதா DLB**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | X |
| வெற்றி இலக்கம் | 13 25 62 76 |
| வெற்றி வாரம் | 5182 |

**SASIRI DLB**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| வெற்றி வாரம் | 0851 |
| வெற்றி இலக்கம் | 19 21 39 |

**லக்ன ராசி DLB**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| | கன்னி |
| வெற்றி இலக்கம் | 18 20 26 28 |
| சீட்டிழுப்பு வாரம் | 4733 |

**KAPRUKA DLB**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | I |
| சுப்பர் இலக்கம் | 37 |
| வெற்றி இலக்கம் | 01 32 49 53 |
| வெற்றி வாரம் | 2197 |

**அத கோடிபதி DLB**
| | |
|---|---|
| திகதி | 18.12.2025 |
| தினம் | வியாழக்கிழமை |
| ஆங்கில எழுத்து | N |
| வெற்றி இலக்கம் | 13 51 63 67 |
| வெற்றி வாரம் | 2847 |




## தந்தை செல்வா நினைவிடத்தில் தமிழரசுக்கட்சியினர் அஞ்சலி

யாழ்ப்பாணம், டிசெ.19

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஸ்தாபிக்கப்பட்ட தினத்தை முன்னிட்டு கட்சியின் ஸ்தாபகர், தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு கட்சியினரால் யாழ்ப்பாணத்தில் நேற்று மரியாதை செலுத்தப்பட்டது.

யாழ்ப்பாண நகரில் உள்ள தந்தை செல்வாவின் நினைவிடத்துக்குச் சென்ற இலங்கை தமிழரசுக் கட்சியினர் உருவச்சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இதன்போது அந்தக் கட்சியின் பதில் தலைவர் சி.வீ.கே.சிவஞானம், பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாகாணசபை முன்னாள் உறுப்பினர்கள், உள்ளூராட்சிசபைத் தவிசாளர்கள், உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-26)



# ஐ.ம.சக்தி – ஐ.தே.க. இணைய தலைமையை இழக்கத் தயார்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.19

**ஐக்கிய தேசியக் கட்சியும், ஐக்கிய மக்கள் சக்தியும் ஒன்றிணைவதற்கு நான்தான் தடையாக உள்ளேன் எனில், தலைமைப் பதவியைத் துறப்பதற்குத் தயார். இரு தரப்புகளும் நிச்சயம் இணையவேண்டும் என்று தெரிவித்துள்ளார் ஐ.தே.க.வின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்க.**

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தவில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்திலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

ஐ.தே.க. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியை ஒன்றிணைப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுவரும் பேச்சுத் தொடர்பான அறிக்கை தனக்கு இன்னும் கிடைக்கப்பெறவில்லை என செயற்குழுக் கூட்டத்தில் ரணில் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தப் பேச்சு விரைவில் நிறைவுக்கு வர வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

நான் தலைமைப் பதவியில் நீண்ட நாள் இருந்துவிட்டேன். வகிக்கவேண்டிய அத்தனை உயர் பதவிகளையும் வகித்துள்ளேன். விட்டுக்கொடுப்பு என்பது எனக்கு கடினமான விடயம் இல்லை எனவும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (ச-44)

# நாமலின் க்ரிஷ் வழக்கு ஒத்திவைப்பு



கொழும்பு, டிசெ.19

**க்ரிஷ் பரிவர்த்தனை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 16ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு அழைக்குமாறு கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.**

கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நதீ அபர்ணா சுவதுருகொட முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சட்டமா அதிபரால் வழக்குத் தொடர்பான சில ஆவணங்கள் பிரதிவாதித் தரப்பு சட்டத்தரணிகளுக்கு வழங்கப்பட்டன. முன்வைக்கப்பட்ட விடயங்களைப் பரிசீலித்த நீதிபதி, இவ்வழக்கை மீண்டும் பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி அழைக்குமாறு உத்தரவிட்டார்.

இலங்கையின் ரக்பி விளையாட்டை மேம்படுத்துவதாகக் கூறி, இந்தியாவின் க்ரிஷ் நிறுவனத்திடமிருந்து 70 மில்லியன் ரூபா பணத்தைப் பெற்று, குற்றவியல் நம்பிக்கை மோசடி செய்தாரென குற்றஞ்சுமத்தி, சட்டமா அதிபரால் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்சவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டித்வா சேதவிவர அறிக்கை கிடைக்க 3 மாதங்களாகும்

## அமைச்சர் பிமல் தகவல்

**கொழும்பு, டிசெ.19**

**டித்வா புயலால் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் முழுமையான - சரியான மதிப்பீட்டு அறிக்கை கிடைப்பதற்கு மூன்று மாதங்கள் ஆகும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். சர்வதேச நிறுவனமொன்றின் ஊடாகவே மதிப்பீட்டு பணிகள் இடம்பெறுகின்றன எனவும் அவர் கூறியுள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பேரிடரால் பாதிக்கப்பட்ட பல குடும்பங்கள் இன்னும் இடைத்தங்கல் முகாம்களில் உள்ளன. பெப்ரவரி மாதம் சாதாரண தரப்பரீட்சை எழுத வேண்டிய மாணவர்கள் உள்ளனர். அவர்கள் தமது எதிர்காலம் பற்றி சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். அதனால் நிலையான வேலைத்திட்டம் என்ன? நிலையான தீர்வு என்ன? இவற்றை ஜனவரியில் ஆரம்பிக்க வேண்டும். அதற்கு எமக்கு பொருளாதார பலம் அவசியம்.

உலக நாடுகள் எமக்கு உதவுகின்றன. 33 நாடுகள் bஉதவிகளை வழங்கியுள்ளன. சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை நடத்தும் திட்டமும் உள்ளது. நாடு எதிர்நோக்கும் சவாலுக்கு இந்த மாநாடு முழுமையான தீர்வாகவும் அமையாது. நாடாக நாமும் தீர்வுகளை தேட வேண்டும் - என்றார். (எ-44)

## புலிகள் – அரசு பேச்சுவார்த்தை: புத்தகம் வெளியிடும் ஜி.எல்.பீரிஸ்

கொழும்பு, டிசெ.19

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுகள் தொடர்பான புத்தகமொன்றை முன்னாள் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் வெளியிட உள்ளார். 'The Sri Lanka Peace Process: An Inside View' என்ற பெயரில் இந்த புத்தகத்தை அவர் வெளியிட உள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகளின் முக்கியமான விவரங்களை இந்தப் புத்தம் வெளிப்படுத்தும் என புத்தகத்தை வெளியிட உள்ள விஜிதயாப்பாபப்ளிகேஷன்ஸ் தெரிவித்துள்ளது. (எ-இ)



## சுவிஸ் தேசிய கவுன்ஸிலின் உபதலைவராக இலங்கையர்

கொழும்பு, டிசெ.19

சுவிட்ஸர்லாந்தின் தேசிய கவுன்ஸிலின் இரண்டாவது உபதலைவராக இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட பாராரூமி தெரிவு செய்யப்பட்டுள்ளார். சுவிட்ஸர்லாந்து பெடரல் நாடாளுமன்றத்தில் இத்தகைய உயர்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டிருக்கும் முதலாவது இலங்கையர் இவராவார்.

கொழும்பு, மாளிகாவத்தைச் சேர்ந்த இவர், கொழும்பு பிஷப் கல்லூரியில் கல்வி பயின்று 1998 ஆம் ஆண்டு குடும்பத்தினருடன் சுவிட்ஸர்லாந்துக்குக் குடிபெயர்ந்திருந்தார். (எஇ)

## கனடா உதவிக்கரம்

கொழும்பு, டிசெ.19

பேரிடரால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு மனிதாபிமான உதவியாக 2 மில்லியன் அமெரிக்க டொலரை கனடா அறிவித்துள்ளது. இலங்கை மக்களுக்கான அவசரகால நிவாரண வேலைத்திட்டத்தை வலுப்படுத்துவதற்காகவே குறித்த உதவி வழங்கப்படுகின்றது. (ச-இ)

## முன்னாள் எம்.பி.கள் இருவர் மறைவு



கொழும்பு, டிசெ.18

அநுராதபுர மாவட்டத்தின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜனக் மகேந்திர அதிகாரி மற்றும் முன்னாள் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர் எஸ்.சி. முத்துகுமாரண ஆகியோர் காலமாகியுள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கெக்கிராவை தொகுதி அமைப்பாளராகவும் செயற்பட்ட ஜனக் மகேந்திர அதிகாரி, சுகயீனம் காரணமாக தனது 60 ஆவது வயதில் காலமானார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அநுராதபுர மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், முன்னாள் சிறைச்சாலைகள் மற்றும் மறுசீரமைப்பு பிரதி அமைச்சருமான எஸ்.சி. முத்துகுமாரணவும் சுகயீனமுற்றிருந்த நிலையில் உயிரிழந்தார்.


இவர், காலமான ஜனக் மகேந்திர அதிகாரியுடன் சமகாலத்தில் அரசியலில் ஈடுபட்ட ஒரு அரசியல்வாதியாவார். (ச-இ)

## சாவகச்சேரி பிரதேசசபை பட்ஜெட் வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், டிசெ.19

சாவகச்சேரி பிரதேசசபையின் 2026ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத்திட்டம் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது சாவகச்சேரி பிரதேசசபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட கூட்டம் நேற்று தவிசாளர் பொ.குகதாசன் தலைமையில் சபாமண்டபத்தில் இடம்பெற்றது. இதன்போது தவிசாளரினால் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்ட இறுதி வரைபு சபையில் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில் வாக்கெடுப்பின்றி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (சு-28)

## *சாப்பிடப் போன நேரத்தில...!*



**சொல்லை விடவும் செயல்தான் சிறந்த ஆயுதம் எண்டு சொல்லுவினம். அப்பிடி ஒரு விசயத்தை கதைச்சு வீணடிக்காமல், சத்தமில்லாமல் செய்துமுடிக்கிற அரசியல் வாதியளும் எங்களிட்ட இருக்கினமெண்டு நினைக்க பெருமையாக்கிடக்குது. உந்த டித்வா புயலும் மழையும் சுழண்டடிச்ச நேரத்தில நல்லூரில ஒரு வீட்டில இருந்த நிண்ட தென்னைமரமொண்டு அப்பிடியே பாறுண்டு விழுந்திட்டுது. அது அப்பிடியே விழுந்திருந்தால் வீட்டுக்கு மேல விழுந்து. அதுக்குள்ள இருந்தவைக்கும் ஏதாவது நடந்திருக்கும். ஆனால் தெய்வாதீனமா அந்தத் தென்னை மரம்,பக்கத்தில நிண்ட நெல்லிமரக்கொப்பில சிக்குப்பட்டு அப்பிடியே இடை நடுவில நிண்டிட்டு.ஆனால் இனி ஏதும் காத்தோ, மழையோ கடுமையா அடிச்சால் அந்த நெல்லிக்கொப்பும் முறிஞ்சு மரமும் வீட்டுக்கு மேல விழுந்துபோடும். அந்த மரத்தை வீட்டுக்கு மேல விழாமல் ஆக்களைப் பிடிச்சு வெட்டியெடுக்கிறதுக்கு, அந்த வீட்டுக்காரரிட்ட பெரிசா வசதியுமில்லை. மரத்தை அப்பிடியே விட்டால் உயிருக்கும் உத்தரவாதமில்லை. அதால அவையள் தங்கட ஏரியா விதானையாரிட்டப் போய், மரம் விழுந்து அந்தரத்தில தொங்கிக்கொண்டிருக்கிறதையும், அதை வெட்டி அகற்றச் சொல்லியும் நாலஞ்சு முறை போய் கேட்டிருக்கினம். ஆனால் விதானையார் அதைக் கண்டுகொள்ளேலை. அதுக்குப் பிறகு அந்த வீட்டுக்காரர் அனர்த்தமுகாமைத்துவப் பிரிவிட்டையும் போய் கெஞ்சி மண்டாடியிருக்கினம். அவையளும் காதையும் கண்ணையும் பொத்திக்கொண்டு இருந்திட்டினம்.**

**இந்தவிசயம் மாநகரசபை உறுப்பினர் மயூரனுக்குத் தெரியவர, அவர் அந்த விசயத்தை மாநகரசபைக் கூட்டத்தில போட்டோவைக் காட்டி, "கஷ்டப்பட்ட அந்தக் குடும்பம் இருக் கிற வீட்டுக்குமேல மரம் விழுந்து ஏதும் நடக்கமுதல் நாங்களாவது முனிசிபல் மூலமா அதை வெட்டிக் குடுப்பம்" எண்டு கேட்டிருக்கிறார். அதுக்கு எல்லா உறுப்பினர்மாரும் ஓமெண்டிருக்கினம். ஆனால் மாநகரசபை இஞ்சினியர் "எங்களிட்ட அதுக்கு ஆளணிவசதி இல்லை" எண்டு கைவிரிச்சிருக்கிறார். இப்பிடியே அதைப்பற்றி ஒருமணித்தியாலமாக் கதைச்சுக் கொண்டிருக்க, சாப்பாட்டு நேரம் வந்து சபை கலைஞ்சிட்டுது. எல்லாரும் சாப்பிட்ட பிறகு திரும்ப சபை கூடியிருக்குது. அப்ப மேயர் "ஒரு குடும்பத்துக்கு உதவிசெய்ய மணித்தியாலக் கணக்கா கதைச்சும் முடிவெடுக்கேலாமல் இருக்கு" எண்டு கவலைப்பட்டிருக்கிறா.**

**அப்ப ராஜ்குமார், யோகராஜா எண்ட முன்னணியின்ர ரண்டு உறுப்பினர்களும் எழும்பி "நாங்கள் ரண்டு பேரும் சாப்பிடப்போன நேரத்தில,எங்கட சொந்தக் காசில ஆளைப்பிடிச்சு அந்த மரத்தை வெட்டிக்குடுத்திட்டம். அதோட அந்தக் குடும்பத்துக்கும் கொஞ்சக் காசும் உதவியாக் குடுத்திருக்கிறம்" எண்டு சொல்ல, எல்லாரும் கைதட்டிப் பாராட்டி இருக்கினம். இந்த விசயத்தை வெளியில கொண்டந்து உதவி கேட்ட மாநகரசபை உறுப்பினர் மயூரனுக்கும், அதைச் சத்தம் போடாமல் சாப்பிடப்போன நேரத்தில சாதிச்சுக்காட்டின முன்னணியின்ர மாநகரசபை உறுப்பினர்களான ராஜ்குமாருக்கும், யோகராஜாவுக்கும் பட்சியின்ர 'சல்யூட்'!**

சொல்லிச் செய்வார் சிறியோர்
சொல்லாமல் செய்வார் பெரியோர்.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நாடாளுமன்றத்தில் நேற்று

# 500 பில்லியன் ரூபாவுக்கு குறைநிரப்புப் பிரேரணை!

கொழும்பு, டிசெ. 19
500 பில்லியன் ரூபாவுக்கான குறைநிரப்புப் பிரேரணை நாடாளுமன்றத்தில் நேற்று முன்வைக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் ஜகத் விக்கிரமரட்ண தலைமையில் கூடியது. இதன்போதே டித்வா புயல் தொடர்பான நிவாரணப் பணிகளுக்குத் தேவையான அவசர நிதியை பெறும் வகையில், பிரதமர் ஹரிணியால் மேற்படி குறைநிரப்புப் பிரேரணை முன்வைக்கப்பட்டது.

அடுத்ததாக இந்தப் பிரேரணை அரசாங்க நிதி பற்றிய குழுவுக்கு அனுப்பப்பட்டு, அந்தக் குழுவின் ஒப்புதல் பெறப்படவுள்ளது.

குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்று, வாக்கெடுப்பு நடத்தப்படும். இந்தப் பிரேரணைக்கு ஆதரவு வழங்கப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் அறிவித்துள்ளார். (ம-44)



வரலாற்றுச் சிறப்புமிக்க கீரிமலை நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரர் ஆலயத்தில் 2025ஆம் ஆண்டின் இறுதிப் பிரதோஷ விரத உற்சவம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-41-66)

# கட்டுப்பாட்டை இழந்த கனரக வாகனம் விபத்து

யாழ்ப்பாணம்,டிசெ.19
மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச்சென்ற கனரக வாகனம், வேகக்கட்டுப்பாட்டை இழந்து, தொலைத்தொடர்பு இணைப்புக் கம்பத்துடன் மோதி, அருகிலுள்ள காணிக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்து சிறுப்பிட்டிப் பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்றது. யாழ். நகரிலிருந்து பருத்தித்துறைக்கு மோட்டார் சைக்கிள்களை ஏற்றிச்சென்ற கனரக வாகனமே விபத்துக்குள்ளானது.

விபத்தில் வாகனம் மற்றும் தொலைத்தொடர்பு இணைப்புக் கம்பம் கடும் சேதங்களுக்குள்ளானது. எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை. அச்சுவேலிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க-26,66)



### தவறான முடிவெடுத்து

# தீயில் எரிந்து மாணவி பலி!

யாழ்ப்பாணம், டிசெ. 19
வல்வெட்டித்துறை கொம்மந்தறைப் பகுதியில், 15 வயதான பாடசாலை மாணவி ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

பரீட்சைப் பெறுபேறு குறைவடைந்ததால் மனமுடைந்தே, அந்த மாணவி தவறான முடிவெடுத்து தனக்குத் தானே தீவைத்துள்ளார். இதையடுத்து, ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர், சிகிச்சையின் போது நேற்று உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-26)

# போதைப்பொருளுடன் நால்வர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.19
தென்மராட்சிப் பிரதேசத்தில் போதைப்பொருள்களுடன் நடமாடிய நால்வர் பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேகநபர்களிடமிருந்து பல இலட்சம் ரூபா பெறுமதியான போதைப்பொருள்கள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (க-131)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை




## மதவாதத்தில் மட்டும் ஒற்றுமை!

வடக்கில் தமிழ் மக்களின் பூர்வீகக் காணிகளில் அத்துமீறி அமைக்கப்பட்ட விகாரைகளில் ஒன்றான தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதிக்கு, பௌத்த கட்டமைப்பின் உயரிய அதிகாரங்களை வழங்கும் நிகழ்வானது, தென்னிலங்கை அரசியலின் மாறாத சுயரூபத்தை மீண்டும் ஒருமுறை வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளது. கொழும்பில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு ஆளும் அரசாங்கத்தின் அமைச்சரும், பிரதான எதிர்க்கட்சித் தலைவரும் இணைத் தலைமை தாங்கவுள்ளனர் என்ற விடயம், தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளைவிட, சிங்கள பௌத்த மேலாதிக்க நிகழ்ச்சிநிரலே தெற்கின் அரசியல் கட்சிகளுக்கு முக்கியமானது என்பதை ஆணித்தரமாக உணர்த்துகிறது.

தையிட்டி விகாரை அமைந்துள்ள நிலம் தமக்குச் சொந்தமானது என்றும், அதனை விடுவிக்க வேண்டும் என்றும் கோரி அந்த நிலத்தின் உரிமையாளர்கள் தொடர்ச்சியாகப் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்தக் காணிப் பிரச்சி னைக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும் என அரசாங்கம் ஒருபுறம் வாக்குறுதிகளை அள்ளிவீசிக் கொண்டே, மறுபுறம் அதே சர்ச்சைக்குரிய நிலத்தில் நிலைகொண்டுள்ள விகாராதிபதிக்கு உயரிய அங்கீகாரத்தை வழங்க முற்படுவது தமிழ் மக்களை ஏமாற்றும் ஒரு செயலாகும். இது, பாதிக்கப்பட்ட மக்களின் காயங்களில் உப்பைத் தடவும் செயலாகவே பார்க்கப்படவேண்டும். நில ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் வகையிலான இத்தகைய கௌரவிப்புகள், நல்லிணக்கம் குறித்த அரசாங்கத்தின் பேச்சுகளின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்குகின்றன.


நாட்டின் பொருளாதாரம், ஊழல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளில் கீரியும் பாம்பும் போல முரண்பட்டுக்கொள்ளும் ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும், தமிழர் தாயகத்தில் முன்னெடுக்கப்படும் பௌத்த மயமாக்கல் அல்லது ஆக்கிரமிப்பு என்று வரும்போது மட்டும் ஓரணியில் திரள்வது வரலாற்று விந்தையாகும். அண்மையில் ஏற்பட்ட பேரிடர் காலங்களில் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதிலோ, அல்லது நாட்டின் நீண்டகாலப் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காண்பதிலோ இணையாத இந்தக் கரங்கள், சர்ச்சைக்குரிய ஒரு விகாராதிபதிக்கு மகுடம் சூட்டுவதில் மட்டும் ஒன்றுசேர்கின்றன. இது தென்னிலங்கை அரசியல் பரப்பில் ஊறிப்போயுள்ள பெரும்பான்மைவாத மனநிலையின் வெளிப்பாடேயன்றி வேறில்லை.

இனவாதத்தையும் மதவாதத்தையும் மூலதனமாகக் கொண்டே தெற்கின் அரசியல் நகர்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதற்கு இந்த நிகழ்வு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். ஆட்சி அதிகாரம் யாருடைய கைகளுக்கு மாறினாலும், தமிழ் மக்களின் நிலவுரிமை மற்றும் இருப்பு சார்ந்த விடயங்களில் சிங்கள பௌத்த மேலாதிக்க நிகழ்ச்சிநிரலே தொடர்ந்தும் முன்னிலைப்படுத்தப்படும் என்ற கசப்பான உண்மையை இது தமிழ் மக்களுக்கு மீண்டும் வலியுறுத்துகிறது. தென்னிலங்கை அரசியல் தலைமைகளின் இந்த இரட்டைவேட நிலைப்பாடானது, தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காகத் தொடர்ந்து போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையே கட்டியம் கூறுகிறது.

நாளொரு நல்வார்த்தை

பயிற்சி இல்லாத அறிவு பயனற்றது. அறிவு இல்லாத பயிற்சி ஆபத்தானது.

–கன்பூசியஸ்




## மூன்று சட்டமூலங்களுக்கு சபாநாயகர் சான்றுரைப்பு



**கொழும்பு, டிசெ.19**
**சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலம், பந்தய, சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலம் மற்றும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமூலம் ஆகிய மூன்று சட்டமூலங்களை சான்றுரைப்படுத்தியிருப்பதாக சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன நேற்று நாடாளுமன்றில் அறிவித்தார்.**

சமூகப் பாதுகாப்பு உதவித்தொகை அறவீடு (திருத்தச்) சட்டமூலமானது 2022ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க சமூகப் பாதுகாப்பு உதவுத் தொகை அறவீடு (திருத்தச்)சட்டத்தைத் திருத்துவதை பிரதான நோக்காகக் கொண்டதாகும். இந்தச் சட்டமூலம் 09.10.2025ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 05.12.2025ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், 05.12.2025ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட சூதாட்ட விதிப்பனவு (திருத்தச்) சட்டமூலத்தின் ஊடாக 2ஆவது வாசகம் திருத்தப்படு கிறது.

அதேநேரம், 14.11.2025ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 05.12.2025ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் (திருத்தச்) சட்டமூலமானது, 2008ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க செயல் நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்ட சட்டமூலத்தைத் திருத்துவதற்கான சட்டமூலமாகும். (ச-இ)

## விபத்தில் இருவர் பலி

கொழும்பு, டிசெ.19
தெஹியத்தகண்டிய - முவகம்மன வீதியில் இடம் பெற்ற விபத்தில் தாயும் குழந்தையும் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளது. முச்சக்கர வண்டியும் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளது. விபத்தில் முச்சக்கர வண்டியில் பயணித்த 33 வயதுடைய தாயும் 2 வயதுடையகுழந்தையுமே உயிரிழந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

## பியூமிக்கு எதிராக குற்றப்பத்திரிகை

கொழும்பு, டிசெ.19
நடிகையும், மொடலுமான பியூமி ஹன்சமாலிக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று உள்நாட்டு இறைவரித் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு பிரதான நீதவானுக்கு அறிவித்துள்ளனர்.

225 மில்லியன் ரூபா வரியை அரசாங்கத்துக்குச் செலுத்தத் தவறிய குற்றச்சாட்டின்கீழ் அவருக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## கணேமுல்ல கொலை கைதிக்குப் பிணை

கணேமுல்ல சஞ்சீவ கொலைச் சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த சந்தேகநபர் ஒருவரை பிணையில் விடுவிக்க கொழும்பு நீதவான் அஸங்க எஸ். போதரகம உத்தரவிட்டுள்ளது. குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சிம் கார்டுகளை வழங்கியதாகக் கூறப்படும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதியே பிணையில் விடுக்கப்பட்டுள்ளார். சந்தேகநபரை தலா 5 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-இ)



## வங்கிக் கணக்குகளில் முதியோர் கொடுப்பனவு

கொழும்பு, டிசெ.19
அஸ்வெசும நலன்புரித் திட்டத்தின்கீழுள்ள குடும்பங்களில், 70 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களுக்கான டிசெம்பர் மாதக் கொடுப்பனவு வங்கிக் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று வியாழக்கிழமை முதல் அஸ்வெசும வங்கிக் கணக்குகளின் ஊடாக அந்தந்தப் பயனாளிகள் இந்தக் கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-9)


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com


நாளை


சனிக்கிழமை – மார்கழி 05

20.12.2025

சுபநேரம் : 03.24 - 04.51

ராகுகாலம் : 09.24 - 10.54


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(ராசிபலன்)

**மேடம்:** மனதில் அவ்வப்போது சஞ்சலங்கள் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களின் தலையீடு காரணமாகக் குடும்பத்தில் குழப்பம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் பொறுமை அவசியம்

**இடபம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரவகையில் சிறுசிறு சங்கடங்கள், வீண்செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்புக் கரையும்.

**மிதுனம்:** நண்பர்கள் வழியில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்க வாய்ப்பு உண்டு.

**கடகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். சிலருக்குத் தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் எதிர்பார்த்த நல்ல தகவல் கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** எதிர்பார்க்கும் காரியங்கள் சாதகமாக முடியும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. உறவினர்களுடன் கருத்துவேறுபாடு ஏற்படக் கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும். தாயின் தேவைகளை நிறைவேற்றி மகிழ்வீர்கள்.

**கன்னி:** பணப்புழக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். தொலைதூரத்திலிருந்து நீண்டநாள்களாக எதிர்பார்த்த நல்ல தகவல் இன்று வந்துசேரும். கணவன் - மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**துலாம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். முக்கியமான முடிவு ஒன்றைத் துணிச்சலுடன் எடுப்பீர்கள். வீட்டில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். பிற்பகலுக்குமேல் உறவினர்கள் மூலம் குடும்பத்தில் சில சங்கடங்கள் ஏற்படும். கணவன் - மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டு நீங்கும்.

**தனுசு:** தாய்மாமன்வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியங்கள் முடிவதில் சிறு தாமதம் ஏற்படக்கூடும். மாலையில் மனதுக்கு மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**மகரம்:** மனதில் தைரியம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். இளைய சகோதரர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டு வருவார்கள். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. சகோதரர்கள் பண உதவி செய்வார்கள். உறவினர்கள்வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**மீனம்:** இன்று பொறுமையும் சகிப்புத்தன்மையும் அதிகம் தேவைப்படும். தாயின் அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம்தரும். உறவினர்கள்வகையில் வீண்மனஸ்தாபம் ஏற்படும். புதிய முயற்சியைத் தவிர்ப்பது நல்லது.

# யாழ்ப்பாணம் மாநகர சபை

## சந்தை, இறைச்சிக்கடைகள், கருவாட்டுக்கடைகள், பல்பொருள்வாணிபக்கடைகள், சிற்றுண்டிச்சாலை, நடமாடும்கடைகள், தள்ளுவண்டில்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி அறிவித்தல் - 2026 (01.01.2026 - 31.12.2026)

இதன் கீழ் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள மேற்படி நிலையங்கள் குத்தகைக்கு வழங்குவதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்வி யாழ்ப்பாணம் மாநகரசபையால் கோரப்படுகின்றது.

கேள்விப் படிவக் கட்டணம் - ரூபா **1,180.00** (வற் வரியுடன்)
கேள்விப் படிவம் விநியோகித்தல் - 19.12 .2025 - 26.12.2025
(மு.ப **9.00** - பி.ப.**2.30 மணி வரை**)
கேள்விப் படிவம் ஏற்றுக்கொள்ளல் - 27.12.2025 மு.ப 10.00 மணி வரை
கேள்வி திறத்தல் - 27.12.2025 மு.ப 10.00 மணிக்கு

1. விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு மாநகரசபை நானாவித இறைவரிப்பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். அல்லது 27.12.2025 ம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலிலோ அல்லது நேரடியாகவோ சமர்ப்பித்தல் வேண்டும்.
2. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்விதாரர் அல்லது அவர் சார்பில் அவரால் அனுமதியளிக்கப்பட்ட எவரேனும் ஒருவர் சமுகமளிக்கவேண்டும்.
3. **சந்தை சுத்திகரிப்பு பணிகளை குத்தகையாளர் தாமே பணியாளர்களை வேலைக்கமர்த்தி மேற்கொள்ள வேண்டும். ஒன்று சேர்க்கப்பட்ட தரம் பிரிக்கப்பட்ட திண்மக்கழிவுகளையும், திரவக்கழிவுகளையும் அகற்றும் பணி மாநகர சபையால் மேற்கொள்ளப்படும். இதற்கான கட்டணம் குத்தகையாளரால் செலுத்தப்பட வேண்டும்.**
4. கடந்த காலங்களில் தவறுநர் எனக்கணிக்கப்பட்டுள்ளோர் அல்லது இச்சபைக்கு குத்தகையாக, வாடகை, வரியாக நிலுவையுள்ளோர் கேள்வி சமர்ப்பிக்க தகுதி அற்றவர் ஆவார் . அத்தகையோர் மறைமுகமாக இன்னொருவர் ஊடாக கேள்வி சமர்ப்பிப்பது குற்றமாகும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் அத்தகைய கேள்வி நிராகரிக்கப்பட்டு அவர்களால் செலுத்திய வைப்புப் பணங்கள் மீளளிக்கப்படமாட்டாது.
5. கேள்வி விண்ணப்பம் பெறுபவர் தேசிய அடையாள அட்டைப்பிரதி மற்றும் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராமசேவை உத்தியோகத்தரது கடிதம் என்பவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.
6. கேள்வியை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஏற்பதற்கும் நிராகரிப்பதற்கும் கேள்விச்சபைக்கு அதிகாரம் உண்டு.
7. குத்தகை தொடர்பான நிபந்தனைகள் கேள்விப்படிவத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை நானாவித இறைவரிப்பகுதியின் விளம்பரப்பலகையில் பார்வையிடமுடியும்
8. **கேள்வியில் சித்திபெற்றவர் குத்தகையின் 1/3 வைப்புப்பணத்தை 30.12.2025 ம் திகதி பி.ப 2.30** மணிக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும்.

**மீள்கேள்வி அறிவித்தல் 2026 – (01.01.2026 - 31.12.2026)**

| இல | விபரம் | கடை இல | பிணைப்பணம் | ஆரம்ப கேள்வித்தொகை |
|---|---|---|---|---|
| 1 | அரியாலை மீன்சந்தை | | 1,000.00 | 120,101.00 |
| 2 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,255,500.00 |
| 3 | பண்ணை ஆட்டிறைச்சிக்கடை | இல.08 | 5,000.00 | 1,285,000.00 |
| 4 | பண்ணை மாட்டிறைச்சிக்கடை | இல.09 | 5,000.00 | 1,601,700.00 |
| 5 | செங்குந்த கருவாட்டுக்கடை | இல.01 | 5,000.00 | 141,000.00 |
| 6 | செங்குந்த கோழிஇறைசிக்கடை | இல04 | 5,000.00 | 663,500.00 |
| 7 | செங்குந்த ஆட்டிறைச்சிக்கடை | இல05 | 5,000.00 | 1,075,000.00 |
| 8 | பாசையூர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 5,000.00 | 626,234.98 |
| 9 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 5,000.00 | 1,781,250.00 |
| 10 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 5,000.00 | 411,500.00 |
| 11 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 5,000.00 | 565,250.00 |
| 12 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.05 | 5,000.00 | 207,965.08 |
| 13 | நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.06 | 5,000.00 | 261,345.00 |
| 14 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.07 | 5,000.00 | 146,225.00 |
| 15 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.08 | 5,000.00 | 130,075.66 |
| 16 | நாவாந்துறை பல்பொருள்வாணிபக்கடை | இல.09 | 5,000.00 | 144,470.75 |
| 17 | நாவாந்துறை கோழி இறைச்சிக்கடை | இல.10 | 5,000.00 | 630,000.00 |
| 18 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.01 | 7,000.00 | 523,000.00 |
| 19 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.02 | 7,000.00 | 647,401.00 |
| 20 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.03 | 7,000.00 | 496,300.00 |
| 21 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.04 | 7,000.00 | 441,000.00 |
| 22 | குருநகர் மாட்டிறைச்சிக்கடை | இல.05 | 7,000.00 | 550,002.00 |
| 23 | துரையப்பா விளையாட்டரங்கு சிற்றுண்டிச்சாலை, துரையப்பா வியைாட்டு அரங்கு நடமாடும் கடை இல 01, சுப்பிரமணியம் பூங்கா - நடமாடும்கடை இல 01, இல 02 | | 61,000.00 | 655,000.00 |
| | **நடமாடும் வியாபாரம் - நிபந்தனை.** 1. நடமாடும் வியாபார விண்ணப்பப் படிவத்தை பூர்த்திசெய்து மாநகரசபையில் அனுமதி பெறப்பட வேண்டும். 2. பொதுப்போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் சபையின் எல்லைக்குள் வியாபாரம் செய்யவேண்டும். | | | |
| 24 | தள்ளுவண்டில் இல 01 | | 20,000.00 | 120,000.00 |
| 25 | தள்ளுவண்டில் இல 02 | | 20,000.00 | 120,000.00 |
| 26 | தள்ளுவண்டில் இல 03 | | 20,000.00 | 120,000.00 |
| 27 | தள்ளுவண்டில் இல 04 | | 20,000.00 | 120,000.00 |
| 28 | தள்ளுவண்டில் இல 05 | | 20,000.00 | 120,000.00 |
| 29 | தள்ளுவண்டில் இல 06 | | 20,000.00 | 120,000.00 |
| 30 | தள்ளுவண்டில் இல 07 | | 20,000.00 | 120,000.00 |

**முதல்வர்,**
**யாழ் மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்**

(CR 467281) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுப் பெருவிழாவும் பாரம்பரியக் கண்காட்சியும்



முல்லைத்தீவு,டிசெ.18

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகால் ஏற்பாடுசெய்யப்பட்ட பண்பாட்டுப் பெருவிழாவும், பாரம்பரியக் கண்காட்சியும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியின் பொன்விழா மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வடக்கு மாகாணத்தின் பாரம்பரிய முறைப்படி விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, பழமை வாய்ந்த பொருள்கள், கலைஞர்களின் ஓவியங்கள் மற்றும் நூல்கள் அடங்கிய கண்காட்சிக் கூடத்தை விருந்தினர்கள் திறந்துவைத்தனர்.

பன்முகத்தன்மையைப் பறைசாற்றும் வகையில் அமைந்த நிகழ்வில், தமிழ் மக்களின் பாரம்பரிய வாள் நடனம் மற்றும் கரகாட்டத்துடன், எருக்கலம்பிட்டி மகளிர் மகா வித்தியாலய மாணவிகளின் இஸ்லாமிய 'ஹசீதா' கலை வடிவமும், வவுனியா தெற்கு துஸ்யந்த கலைமன்றத்தின் சிங்கள 'கண்டிய நடனமும்' ஒரே மேடையில் அரங்கேற்றப்பட்டன.

நிகழ்வில் கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இ.சந்திரசேகர், கூட்டுறவுத்துறைப் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமா மகேஸ்வரன் ஆகியோருடன், பெருந்திரளான கலைஞர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர். (க-இ)

## வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) வெளிவாரியாக ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

**1. உற்பத்தி முகாமையாளர் - சம்பள குறியீட்டு இல** - 107/12

1. சம்பள அளவுத்திட்டம்-
33820-550x0-610x10-770x10-53120-405840-6600x10-7320x10-240x10-429000
2. அங்கிகரிக்கப்பட்ட தகைமைகள்-
அ) கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்ட பதவியில் சம்பந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 2 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு உழியர் 14 ஆவது சம்பளத் திட்டப்பதவியில் சம்மந்தப்பட்ட துறையில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திர பரீட்சையில் சித்தி / க.பொ.த உயர்தரப்பத்திர பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் உற்பத்தி / சந்தைப்படுத்தல்/ பொருள் விநியோகமும் பங்கீடும்/பொருள் இறக்குமதியும் ஆகிய பிரிவுகளில் ஒன்றில்/ அதற்கு மேற்பட்ட பிரிவுகளில் முகாமை / மேற்பார்வை நிலைப்பதவியொன்றில் சம்மந்தப்பட்ட துறையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்.

**2. களஞ்சிய மேற்பார்வையாளர் - சம்பள குறியீட்டு இலக்கம்** 207/13

1. சம்பள அளவுத்திட்டம்-
33360-520x10-580x10-740x10-51760-400320-6240x10-6960x10-8880x10- 422400
2. அங்கிகரிக்கப்பட்ட தகைமைகள்
அ. கூட்டுறவு ஊழியர் 14வது சம்பளத்திட்ட பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது இரண்டு வருட கால அனுபவம் /
கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர உயர்தராதர பத்திரப் பரீட்சையில் சித்தி/
க.பொ.த.உயர்தரப்பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தி
இ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி / க.பொ.த சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தழிழ் உட்பட 3 திறமைசித்தியுடன் கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.

**3. களஞ்சிய முகாமையாளர் - சம்பளக் குறியீட்டு இலக்கம்**- 208/14

1. சம்பள அளவுத்திட்டம்-
32900-490x10-550x10-710x10-50400-394800-5880x10-6600x10x8520x10-415800
2. அங்கிகரிக்கபட தகமைகள்
அ) கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்மந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்/
கூட்டுறவு ஊழியர் 16ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி/
க.பொ.த.சாதாரண தரப் பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம் / தழிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி

**4. களஞ்சிய முகாமையாளர் சம்பள குறியீட்டு இல** -208/15

1. சம்பள அளவுத்திட்டம் -
32435-460x10-520x10-49035-389220-5520x10-6240x10-8160x10-409140
2. அங்கிகரிக்கப்பட்ட தகமைகள்
அ) கூட்டுறவு ஆழியர் 16 ஆவது சம்பளத்திட்ட பதவியில் சம்பந்தப்பட்ட பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.
கூட்டுறவு ஊழியர் 17 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவி ஒன்றில் ஆகக்குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ) கூட்டுறவு ஊழியர் சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தி /
க.பொ.த.சாதாரண தரப்பத்திரப் பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/ தமிழ்மொழி, கணிதம் உட்பட 6 பாடங்களுடனான சித்தி.


1. மேற்குறித்த பதவிகளுக்கான சம்பளத்திட்டங்கள் அனைத்தும் கூட்டுறவ வேலையாளர் ஆணைக்குழுவின் 02/2025(i) சுற்று நிருபத்திற்கு அமைவானது
2. வயதெல்லை 18 - 45 ( சங்கப்பணியாளர்களுக்கு இவ்வயதெல்லை பொருத்தமற்றது)
3. இப்பதவிக்குரிய அடிப்படைச்சம்பளத்தை விட கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் இதர படிகளும் காலத்திற்கு காலம் அங்கிகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்
4. குறித்தபதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணைப் பணத்தினைச் செலுத்த வேண்டும்.
5. ஏற்கனவே கூட்டுறவுச்சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் அச்சங்கத்தின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும்.
6. தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்ப படிவத்தினை சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 100/= செலுத்தி பெற்று பூரணப்படுத்தப்பட்டு சான்றிதழ்களின பிரதியும் இணைத்து கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர், பதவிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் என்பவற்றைக்குறிப்பிட்டு "**தலைவர் வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் 1ம் வட்டாரம் வேலணை கிழக்கு வேலணை** எனும் முகவரிக்கு 01.01.2026 ஆம் திகதிக்கு முன் கிடைக்க கூடியவாறு பதிவுத்தபாலிலோ நேரடியாகவே அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

தலைவர்
வேலணை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 12 . 1946



மறைவு 17 . 12 . 2025

### சின்னத்தம்பி சிதம்பரநாதன்

துணைவி, சங்கரத்தையை பிறப்பிடமாகவும் டச்சு வீதி, சித்தன் கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சிதம்பரநாதன் கடந்த 17.12.2025 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு - மகாலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சி.தேவஞானியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சி.கணேசபிள்ளை, சி.பரமேஸ்வரன், சி.லோகநாயகி, சி.யோகேஸ்வரி, சி.கனகநாயகம், சி.லட்சுமணநாதன், சி.சபாநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், சி. செல்வானந்தன், சி. தனவதனன், சி.குகானந்தன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கமலாம்பிகை, குணரத்தினம், கெங்காதரன் மற்றும் புஸ்பராணி, நகுலேஸ்வரி, தேவராசா, கேசவன், நவராணி, கணேசராஜா, சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கீர்த்தனா, யதீஸ், ஷஸ்வின், அஞ்சனா, அஸ்வா, அஸ்வினா ஆகியோரின் பாசமிகு அப்பப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டச்சு வீதி, சித்தன்கேணி. (CS 30914) A குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 07 . 11 . 1951



மறைவு 18 . 12 . 2025

### திருமதி யோகநாதன் மகேஸ்வரி

மலேசியாவை பிறப்பிடமாகவும், வரியப்புலம், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகநாதன் மகேஸ்வரி அவர்கள் நேற்று (18.12.2025) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா - சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற யோகநாதன் (ஓய்வு பெற்ற தபாலதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நாகரத்தினம் அவர்களின் பாசமிகு சகோதரியும், தக்ஷாயினி (அபிவிருத்தி உத்தியோகத்தர் - வலி தெற்கு பிரதேச செயலகம்), அனந்தன் (Network Engineer - Singapore), சகிந்தன் (பொது சுகாதார பரிசோதகர் - யாழ் மாநகர சபை) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவரூபன் (ஆசிரியர் - யா/மல்லாகம் மகாவித்தியாலயம்), பாதுஜா (அபிவிருத்தி உத்தியோகத்தர் - யாழ் மாவட்ட செயலகம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கவிசாலினி, புருசோத்மன், ஜெயசாலினி, ஜெனனி, சங்கவி, கருணியன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19-12-2025) வெள்ளிக்கிழமை பி.ப 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
வரியப்புலம்,
சுன்னாகம். (CS/30310) J-1 077 504 3239, 075 597 5157

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சறுக்கி வீழ்ந்ததில் மூதாட்டி காயம்

யாழ்.,டிசெ.19 தீப்பந்தம் சுற்றுவதற்குத் தடி எடுக்கச் சென்ற வயோதிபப் பெண் ஒருவர், சறுக்கி வீழ்ந்ததில் அவரது இடுப்பில் வெடிப்பு ஏற்பட்டது. இந்தச் சம்பவம் நீர்வேலிப் பகுதியில் கார்த்திகைத் தீபத் திரு நாளன்று இடம்பெற்றது. காயமடைந்த பெண் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

(க-131)

## முருகநாமப் பஜனை

யாழ்., டிசெ.19 சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை காலை 10.30 மணியளவில் நடைபெறவுள்ளது. நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர்செ.மோகனதாஸ் சுவாமிகள் குழுவினரின் முருகநாமப் பஜனை நிகழ்வு நடைபெறும்.

(ச-41-66)

## மண்சரிவு எச்சரிக்கை!

கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேவேளை, கண்டி, குருநாகல் மற்றும் நுவரெலியா மாவட்ட மக்கள் மண் சரிவு குறித்து மிகவும் அவதானமாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(ச)

# வலிகாமம் வடக்குபிரதேச சபை காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

## பொது அறிவித்தல் - 2026

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட பொது மக்கள் / தொழில் நிறுவன உரிமையாளர்கள் எமது சபையினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்கின்றேன். குறித்த நடைமுறைகளை பின்பற்ற தவறுவோர்மீது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் மற்றும் தொடர்புடைய சட்டங்களின் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.

| இல | விடயம் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|
| 01 | ஆதனப் பெயர் மாற்றம் | காணி உரிமையினை மாற்றிப் பெற்றுக்கொண்டவர்கள் உடனடியாகவே பிரதேச சபையின் உரிய உப அலுவலகங்களில் விண்ணப்பப் படிவத்தினைப் பெற்று தேவையான உறுதிகளின் பிரதியுடன், நில அளவைப் படம், தோம்பு மற்றும் தேவையான ஆவணங்களுடன் சட்டத்தரணி ஒருவரினால் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினையும் வழங்குவதன் மூலம் ஆதனப் பெயர் பதிவேட்டில் பெயர் மாற்றத்தினை செய்து கொள்ள வேண்டும். |
| 02 | ஆதனவரி செலுத்துதல் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் படி உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி வலிகாமம் வடக்கு பிரதேசத்தில் அமைந்திருக்கும் அனைத்து ஆதனங்களிற்கும் 2026 ஆம் ஆண்டிற்கான ஆதன வரியினை 31.01.2026 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோரிற்கு மொத்த வரியில் 10% கழிவு வழங்கப்படும் என்பதோடு காலாண்டுக் கட்டணங்களாக செலுத்தப்படும் போது ஒவ்வொரு காலாண்டினதும் முதலில் வரும்மாதம் முடிவதற்குள் செலுத்துபவர்களிற்கு 5% கழிவும் வழங்கப்படும். இச் சலுகையானது இறுதி காலாண்டிற்கு செல்லுபடியாகாது.குறித்த வருடத்திற்கான ஆதன வரியினை குறித்த வருடத்திற்குள் செலுத்த தவறியோருக்கு ஆண்டு வரியில் விறாத்துக் கட்டணமாக வெறுங் காணி,வதிவிடம் போன்றவற்றிற்கு 15% உம் ஏனைய ஆதனங்களிற்கு 20% உம் அறவிடப்படும். |
| 03 | வியாபார உரிம அனுமதிப்பத்திரம் | சபை எல்லைக்குள் வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்பவர்கள் 2026 ஆம் ஆண்டுக்கான வியாபார அனுமதிப்பத்திரத்தை 2026.03.31 ஆம் திகதிக்கு முன்பாக உரிய ஆவணங்களினை சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். 31.03.2026 ஆந் திகதிக்கு முன்பாக உரிய கட்டணங்களினை செலுத்த தவறுவோரிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 04 | சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் | 2022 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 27 ஆந் திகதிய 2264/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் 'ஈ' பகுதியில் குறிப்பிடப் பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை வலிகாமம் வடக்கு பிரதேசத்திற்குள் மேற்கொள்வோர் தமது பகுதி உப அலுவலகத்தில் உரிய படிவத்தினை பெற்று சூழல் பாதுகாப்பு உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் 03 வருடங்கள் முடிவடைந்த சூழல் பாதுகாப்பு உரிமங்கள் யாவும் புதுப்பிக்கப்பட வேண்டும். |
| 05 | கட்டடங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல், புதுப்பித்தல், திருத்துதல் கட்டணங்கள் அறவிடல் | 1.வலி வடக்கு பிரதேச எல்லைக்குள் புதிய கட்டிடங்கள் அமைத்தல்,எல்லைச் சுவர் அமைத்தல், கொங்கிறீட் தூண் இட்டு முட்கம்பி வேலி அமைத்தல்,கிணறுகள், குழாய்கிணறுகள் அமைத்தல் கட்டிடங்கள் விரிவாக்கம் செய்தல், திருத்துதல், புதுப்பித்தல் என்பன பிரதேச சபையின் அனுமதி பெற்று செயற்பட வேண்டும். சபையின் அனுமதி பெறப்படாது அமைக்கப்பட்ட கட்டுமானங்கள் எதுவாகினும் அனுமதி அற்ற கட்டிடங்களாக கருதி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அல்லது நட்டஈடு இன்றி அகற்றப்படும்.<br>2.கட்டிட அனுமதி பெற்றுக்கொள்ளப்பட்டு ஒரு வருடத்திற்குள் கட்டி முடிக்கசப்படாத கட்டிடங்கள் தொடர்பாக கால நீடிப்பு அனுமதி பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.<br>3.அனுமதி பெற்று அமைக்கப்பட்ட கட்டிடம் தொடர்பாக சபைக்கு அறியத்தந்து உரிய கட்டிட அமைவுச் சான்றதழை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.<br>4.அனுமதியற்ற கட்டிடங்களிற்கு பின்வருமாறு தண்டப்பணம்அறவீடு செய்யப்படும். அத்துடன் வீதி எல்லைக் கோட்டை பாதிக்கும் வகையில் அமைக்கப்பட்ட கட்டிடங்கள் அகற்றப்படும். |

| தொ.இல | அனுமதியற்று கட்டப்படும் கட்டிடங்களுக்கான தண்டப்பண விபரம் | வதிவிடம் (குடியிருப்பு) ஒவ்வொரு சதுர மீற்றருக்கும் | வர்த்தக மற்றும் ஏனைய தேவை களுக்கான கட்டிடங்கள் ஒவ்வொரு ச.மீற்றருக்கும் |
|---|---|---|---|
| 01 | அத்திவார பணிகளின் பூர்த்தி (தூண் பீட மட்டம் வரை) | ரூ.200.00 | ரூ.500.00 |
| 02 | தூண்கள் மற்றும் விட்டங்கள் உள்ளடங்கலாக கூரை மட்டம் வரையிலான நிர்மானம் (கூரை நீங்கலாக) | ரூ.300.00 | ரூ.1000.00 |
| 03 | சுவர்களுடனான கூரை மட்டம் வரையான நிர்மானம் | ரூ.400.00 | ரூ.1500.00 |
| 04 | நிர்மானம் பூர்த்தி செய்யப்பட்டது | ரூ.500.00 | ரூ.2000.00 |
| 05 | கைபிடிசுவர்களை/தடுப்புச் சுவர்களை நிர்மானித்தல் ஒவ்வொரு நேரான மீற்றருக்கும் | ரூ.200.00 | ரூ.500.00 |
| 06 | தொலைத் தொடர்பாடல்,பரிமாற்றம் மற்றும் உணர்கொம்பு கோபுரங்களை உருவாக்குதல் | நிர்மானம் - நிலமட்டம் ரூ.150,000.00<br>நிர்மானம் - கூரைமேல் ரூ.100,000.00 | |
| 07 | அமைவுச்சான்றிதழ் பெறாமல் குடியிருப்பவர்கள்/ பயன்படுத்துதல் | நாளொன்றுக்கு ரூ.100.00 | |

| இல | விடயம் | குறித்த நிதியாண்டிற்கான அறிவித்தல் |
|---|---|---|
| 06 | துவிச்சக்கரவண்டி உரிமம், மிருக வரி உரிமம் பெற்றுக்கொள்ளல் | 2026 ஆம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி, மிருக வரி உரிமங்களை 2026.03.31 ஆம் திகதிக்கு முன்பாக பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 07 | விளம்பரங்களை காட்சிப்படுத்தல் | சபையின் நிர்வாக எல்லைக்குள் வீதிகளின் இருமருங்காகவும் வீதிக்கு மேலாகவும் வர்த்தக மற்றும் சேவை நிலையங்களிலும் காட்சிப்படுத்தப்படவுள்ள விளம்பரங்களிற்கு பிரதேச சபையில் கட்டணம் செலுத்தி அனுமதியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். அனுமதியை பெற்றுக்கொள்ளாத வர்த்தகநிலைய உரிமையாளர்கள்/ நிறுவனங்கள்/ முகவர் நிறுவனங்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு சகல விளம்பரங்களும் அகற்றப்படும். |
| 08 | முச்சக்கரவண்டி தரிப்பிடம் | சபையின் எல்லைக்குள் முச்சக்கரவண்டி சேவையை வழங்குபவர்கள் அதற்கென ஒதுக்கப்பட்ட முச்சக்கரவண்டி தரிப்பிடத்தில் தரித்து நின்று சேவையை வழங்குவதுடன் பிரதேச சபையில் உரிய கட்டணத்தை செலுத்தி பதிவு செய்யப்படவும் வேண்டும். |
| 09 | மரக்கறி,மீன், இறைச்சி விற்பனை தடைசெய்தல் | வலி வடக்கு பிரதேச சபை எல்லைக்குள் உள்ள சந்தைகளிலிருந்து 1KM தூரத்திற்குள் வர்த்தக நிலையங்கள், பாதையோரங்கள் என்பவற்றில் மரக்கறி, மீன், கோழி இறைச்சி விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது.ஏனைய மிருகவகை இறைச்சிகள் யாவும் பிரதேச சபையின் உத்தரவுப் பத்திரத்திற்கு அமையவே விற்பனை செய்யப்படலாம். |
| 10 | படவரைஞரைப் பதிவு செய்தல்/ புதுப்பித்தல் | 2026 ஆம் ஆண்டுக்கு படவரைஞராகப் பதிவு செய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் படவரைஞராகப் பதிவு செய்தவர்களும் 2026.01.31 ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும் அல்லது புதுப்பித்துக்கொள்ளவும். இதற்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய தகுதிச் சான்றிதழாக NVQ 05 (கட்டிடவாக்கத்துடன் தொடர்புடையது) சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| 11 | திண்மகழிவுகள் தொடர்பாக குடியிருப்பாளர்கள்,வியாபார நிலையங்கள் கடைப்பிடிக்க வேண்டியவை | சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய திண்மக்கழிவுகளினை தரம் பிரித்து வழங்கும் குடியிருப்பாளர்கள்,வியாபார நிறுவத்தினோரது திண்மக் கழிவுகள் மட்டுமே பிரதேச சபையின் கழிவகற்றும் வாகனங்களில் பெற்றுக்கொள்ளப்படும். |
| 12 | பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும், வீதியோரங்களிலும் கழிவுகளை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. | சபையின் எல்லைக்குட்பட்ட பொது இடங்களிலும் வர்த்தக நிலையங்கள் முன்பாகவும் வீதியோரங்களிலும் கழிவுப்பொருட்களை போடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. பொதுமக்கள், வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கொள்கலனில் கழிவுப்பொருட்களை சேகரித்தும், மேலதிக கழிவுகளை அகற்றுவதற்கு எமது சபையின் உப அலுவலகங்களில் உரிய கட்டணத்தை செலுத்தினால் கழிவுகள் அகற்றப்படும் என்பதோடு சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு ஒத்துழைப்பு நல்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன். |
| 13 | இந்து மயானங்களில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணம் அறவிடப்படும். | இந்து மயானத்தில் சடலங்களை எரியூட்டுவதற்கு அல்லது புதைப்பதற்கு கட்டணமாக ரூபா1000.00 அறவிடப்படும். இக்கட்டணத்தை **அலுவலக வேலை நாட்களில்** காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.15 மணி வரை உரிய உப அலுவலகத்திலும் **சனி,ஞாயிறு மற்றும் பொது விடுமுறை தினங்களில்** உரிய உப அலுவலகத்துக்குரிய பொது நூலகத்திலும் செலுத்தி அனுமதியினை பெற்றுக்கொள்ள முடியும். அனுமதிக்காக மேற்குறித்த இடங்களில் விண்ணப்பத்தை பெற்று, பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் இறப்பு தொடர்பாக கிராம சேவகர் அல்லது வைத்திய அதிகாரியின் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 14 | வீதி ஓரங்களில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குதல் தொடர்பாக | சபைக்கு சொந்தமான வீதிகள் மற்றம் வீதி அபிவிருத்தி சபை, வீதி அபிவிருத்தித் திணைக்களம் ஆகிய திணைக்களங்களின் பரிபாலனத்துக்குட்பட்ட வீதிகளில் கம்பங்களை நிறுவி சேவைகளை வழங்குகின்ற சபைகள் மற்றும் தனியார் நிறுவனங்கள் பிரதேச சபையில் முறைப்படி அனுமதி பெற்ற பின்பே தமது சேவையை ஆரம்பித்தல் வேண்டும். |
| 15 | பொதுச் சுகாதாரம் பேணல் | சபையின் எல்லைக்குள் அபிவிருத்தி செய்யப் படாமலும் பற்றைகள் வளர்ந்தும் பொதுச் சுகாரத்திற்கு இடையூறாக உள்ள காணிகளின் உடமையாளர்கள்/ பராமரிப்பாளர்கள் அவற்றினை துப்பரவு செய்து பொதுச் சுகாரத்தை பேணுவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். தவறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். |
| 16 | கழிவு நீர் | பகிரங்க வடிகால்களில் அனுமதியின்றி வீட்டுக் கழிவுநீர், வியாபார நிலையங்களின் கழிவுநீர் சேர்க்கப்பட்டால் சட்டவிரோதமானதாகும். அவ்வாறு செயற்படுவோர் மீது உரிய சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 17 | கட்டாக்காலி கால்நடைகளைக் கட்டுப்படுத்தல் | சபை எல்லைக்குள் அலைந்து திரியும் கால்நடைகளை உரிமையாளர்கள் கட்டி வளர்க்க வேண்டும் என்பதோடு கட்டி வளர்க்காத கட்டாக்காலிகள் சபையினால் பிடிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 18 | இயற்கை நீரோட்டத்தை தடுத்தல் | மழைக்காலங்களில் இயற்கை நீரோட்டத்திற்கு பாதிப்பு ஏற்படும் வகையில் கட்டுமானப்பொருட்கள், கட்டட இடிபாடுகள் மற்றும் ஏனைய கழிவுப்பொருட்கள் குடியிருப்பாளர்களினால் தேக்கி வைத்திருப்பின் அவை சபை உடைமையாக்கப்படுவதோடு நேரடியாக சட்ட நடவடிக்கையும் எடுக்கப்படும். |
| 19 | பிரதேச சபையால் வழங்கப்படும் இதர சேவைகள் | **1) குடிநீர் வழங்கல் சேவை**<br>எமது பிரதேச சபைக்குட்பட்ட பொது மக்களிற்கான குடிநீர் விநியோகம் 1 லீற்ரர் ரூபா 1.00 என்ற கட்டண அடிப்படையிலும் வேறுவகையான பயன்பாட்டிற்கு 1 லீற்றர் ரூபா 2.00 என்ற கட்டண அடிப்படையிலும் பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் செலுத்துவதன் மூலம் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்.<br>**2) கனரக வாகன சேவைகள்**<br>மோட்டக்கிரேன்ரர், (B)பக்கோ, கலிபௌசர், றோலர் போன்ற கனரக வாகன சேவைகளை பெறுவதற்கு தலைமைக்காரியாலயத்தில் குறித்த சேவைக்கான கட்டணங்களை செலுத்தி வாகன சேவைகளை பெற்றுக்கொள்ளலாம். |

மேற்படி விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில் புரிவோர் அறிவுறுத்தல்களினை பின்பற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும், தவறுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதினையும் அறியத்தருகின்றேன்.

சோ.சுகீர்தன்.
தவிசாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

மண்ணில்
18 . 10 . 1935



விண்ணில்
18 . 12 . 2025

## திருமதி ஞானாம்பாள் சண்முகநாதன்

சரசாலையினை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஞானாம்பாள் சண்முகநாதன் அவர்கள் நேற்று (18.12.2025) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை சண்முகநாதனின் அன்பு மனைவியும், கமலாதேவி, விமலாதேவி, நிர்மலாதேவி, சகுந்தலா மற்றும் காலஞ்சென்றவர்களான சாந்தகுமார், சிவகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், முகுந்தன், பிறமிலா, பிரவீனன், துவாரகன், திலக்ஷன், ஹெப்சிபா, ஷலோமி, கேசியா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் : குடும்பத்தினர்.
077 617 6584
077 954 4411
077 536 0853

இல.20, கந்தபுராண வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(CS 30315) A

# மரண அறிவித்தல்

தோற்றம்
07 . 05 . 1953



மறைவு
15 . 12 . 2025

## LION திரு. திருநாவுக்கரசு இராஜேந்திரன்

(இராஜேந்திரா வர்த்தக நிலையம் மற்றும்
ஸ்ரீரங்கநாதன் றேடர்ஸ் - உரிமையாளர், பஞ்சகர்த்தா,
முன்னாள் பொருளாளர், முன்னாள் திருப்பணிச்சபை தலைவர்,
தற்போதைய தலைவர் கலட்டி எச்சாட்டி மகாமாரி அம்மன் தேவஸ்தானம்,
உறுப்பினர் திருநெல்வேலி அரிமாக் கழகம், அகில இலங்கை சமாதான நீதவான்)

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியை பிறப்பிடமாகவும், கொக்குவில் பொற்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு இராஜேந்திரன் அவர்கள் கடந்த (15.12.2025) திங்கட்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மு.தா. திருநாவுக்கரசு (யாழ்ப்பாணம் - பிரபல வர்த்தகர்) - தனலக்ஷிமி தம்பதியரின் மூத்த மகனும், பூபாலசிங்கம் - ஜீவமணி தம்பதியரின் மருமகனும், சுகந்தினியின் அன்புக் கணவரும், கோபிகன் (லண்டன்), றஜீவன், சஜிந்தன், விதுஷா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலேந்திரன், இந்திரஜோதி, ரவீந்திரன், சந்திரவதனி, காலஞ்சென்ற தவேந்திரன் மற்றும் சுகந்தமலர், வசந்தமலர், ஞானேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், தாமிரா (லண்டன்) இன் அன்பு மாமாவும், பிரஹாணா வின் அன்பு பேரனும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை பி.ப 02.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

பொற்பதி வீதி,
கொக்குவில்.

(CR/46729) J-1

தகவல்: குடும்பத்தினர்
077 343 3924, 077 440 9[illegible]20

# மரண அறிவித்தல்



தோற்றம்
14.03.1949

மறைவு
15.12.2025

## மனோரஞ்சிதமலர் யேசுராஜன்
## (பேபி)

மட்டுவில் தெற்கு சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோரஞ்சிதமலர் யேசுராஜன் கடந்த 15.12.2025 திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை - இராசமணி தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற யேசுராஜனின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராமச்சந்திரா மற்றும் சந்திரவதனா (கனடா) ஆகியோரின் சகோதரியும், இந்திரமதி (ஓய்வுபெற்ற ஆங்கில விரிவுரையாளர்), மெய்யழகன் (ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் மைத்துனியும், ஜொவிற்றா மேசி (லண்டன்), ஜஸ்ரின் ஜயந்தன் (கனடா), யூட்ஜீவன் (RDA - Jaffna), ஜெராட் ஜோன்சன் (NSB Jaffna), ஜேம்ஸ் யூலியன் (Visakan Constructions/Ananja Travels), ஜெனிஜெரோம் (JS Micro Credit (Pvt) Ltd மற்றும் Murugan Stores) ஆகியோரின் அன்புத் தாயாரும், கிருபானந்தன் (லண்டன்), ஜெனந்தி (கனடா), ஆரணி (Medical Care Hospital), நிருஷா, தர்ஷா, துலஷா, கௌஷா ஆகியோரின் அன்பு மாமியாரும், அஞ்ஞனன், அகல்யன், அஞ்சயன், அனஞ்சா, அஜோஷன், தஷ்விகா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் மட்டுவில் லூர்து அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 193 0443
077 963 8342
076 159 6912
076 172 7812

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

(CS 307795) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியத் துணைத்தூதுவருடன் சாவ.நகரசபையினர் சந்திப்பு!


யாழ்ப்பாணம்,டிசெ.19

யாழ். இந்தியத் துணைத்தூது வர் சாய் முரளிக்கும் சாவகச்சேரி நகராட்சிமன்றத் தினருக்கும் இடையிலான உத்தியோக பூர்வ சந்திப்பு யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது. இதன்போது நகராட்சிமன்றின் செயற்பாடுகள் மற்றும் பல்வேறு தேவை கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது டன் நகராட்சிமன்றுக்கு இந்திய உதவி யைப் பெற்றுக்கொள்வது தொடர்பாக வும் கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இந்தியத் துணைத் தூதரகத்தினால் இந்தியக் கலைஞர்க ளைக் கொண்டு யாழ்ப்பாணத்தில் கலை கலாசார நிகழ்வுகளை நடத்துகின்ற வேளை நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்திலும் அந்த நிகழ்வுகளை நடத் துதல், நகராட்சி மன்ற மைதான புனர மைப்பு, சாவகச்சேரி நகராட்சிமன்றத்திற் கும் இந்தியாவில் உள்ள நகராட்சி ஒன் றுக்கும் இடையில் புரிந்துணர்வை ஏற்ப டுத்தி ஆலோசனை மற்றும் வளப் பரி மாற்றங்களில் ஈடுபடுதல், உறுப்பினர் கள், ஊழியர்களுக்கு பயிற்சிகள் மற்றும் நேரடி களத்தரிசிப்புகளை ஏற்படுத்துதல் போன்ற கோரிக்கைகளை நகராட்சிமன் றத்தினர் முன்வைத்தனர். குறித்த விட யங்கள் தொடர்பில் கலந்துரையாடிய துணைத்தூதுவர், நகராட்சி மன்றத்தின ரோடும் தமிழ் மக்களின் நலனிலும் அதீத அக்கறையுடன் தொடர்ந்தும் பணி யாற்றுவோம் எனத் தெரிவித்தார்.

(ச-27,28)

## மரண அறிவித்தல்



தோற்றம் 14.03.1958 — மறைவு 18.12.2025

**வாரித்தம்பி பத்மநாதன்**
**(சின்ராசு)**

மீசாலை கிழக்கு, மீசாலையை பிறப்பிட மாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி பத்மநாதன் (நாதன் களஞ்சியம்) அவர்கள் நேற்று (18.12.2025) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வாரித்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு புதல்வனும், காலஞ்சென்ற பேரம்பலம் - கனகம்மா தம்பதி யரின் அன்பு மருமகனும், விமலகேசினியின் அன்புக் கணவரும், நர்மதன், யதுஷிகா ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அமரர் கற்பகம்-முத்து, கணபதிப்பிள்ளை -ராசா, சடாச்சரம் - இரத்தினம், அமரர் கமலாம்பிகை, சிவராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற நமசிவாயம், பாக்கியரட்ணம், தங்கம்மா, அமிர்தலோஜினி, குமுதினி, குலேந்திரன், றஞ்சினி, சுபாஜினி ஆகியோரின் மைத்துனரும், காலஞ்சென்ற சண்முகநாதன், சுதர்சினி, அருட்செல்வன், சர்வானந்தன் ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பித்து, பூதவுடல் தகனக்கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புதிய வீரபத்திரர் வீதி,**
**மீசாலை கிழக்கு,**
**மீசாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 6621 018**

(CR 46731) A

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணம் பிறவுண் வீதியில் யாழ். நகரை அண்மித்த பகுதியில் வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் நேரில் பேசி தீர்மானிக் கப்படும்.

தொடர்பு:
**077 99 63 329**

(CS 30913) A

## கண்ணீர் அஞ்சலி



**தி. இராஜேந்திரன் J.P**

**(தலைவர் கலட்டி மஹாமாரியம்மன் தேவஸ்தானம்**
**மற்றும் பஞ்சகர்த்தா உறுப்பினர்,**
**முன்னாள் திருப்பணிச் சபை தலைவர்,**
**முன்னாள் உப தலைவர்**
**இளைஞர் கழகம்)**

மண்ணோடு உங்கள் பூதவுடல்
மறைந்து விட்டாலும்
நினைவுகள் எங்கள் இதயத்தில் இருந்து
ஒருபோதும் மறைவதில்லை
பாசமான நினைவுகளை எம்மிடம் விட்டு சென்றீர்
உங்கள் ஆத்மா கலட்டி அம்மனின் பாதத்தில்
சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.


மலர்வு 07.05.1953 — உதிர்வு 15.12.2025

**கலட்டி எச்சாட்டி**
**மகாமாரியம்மன் தேவஸ்தானம்**
**மற்றும் கலட்டியம்மன்**
**இளைஞர் கழகம்**

(CS/30912) J-1

## ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்.....

தோற்றம் 01 . 12 . 1945



மறைவு 13 . 01 . 2021

**அமரர் சின்னத்துரை குமரவேல்**

**(ஓய்வுபெற்ற நூலகர் - பொது நூலகம், சுன்னாகம்,**
**முன்னாள் தலைவர் - பல நோக்கு கூட்டுறவுச்சங்கம், சுன்னாகம்,**
**முன்னாள் விவாகப் பதிவாளர் - வலிகாமம் வடக்குப் பிரிவு)**

**திதி: அமாவாசை (19.12.2025)**

ஆருயிர் அப்பாவின்
நீக்கமற நிறைந்திருக்கும்
நினைவுகளின் நீட்சியுடன்....
கூடிக் குலாவிய நாட்கள்
ஆர்ப்பரிக்கும் அலைகளாக
அவனியிலே ஐந்தாண்டுகளாய்....

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!


**"திருவேரகம்"**
**முத்துக்கிருஷ்ணர் வீதி,**
**சுன்னாகம்.**

**குடும்பத்தினர்.**

(CS 30917)

## மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 05 . 1958



மறைவு 18 . 12 . 2025

**நாகமணி சந்திரசேகரம் (சந்திரன்)**

தொட்டிலடி சங்கானையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சந்திரசேகரம் (சந்திரன்) அவர்கள் நேற்று (18.12.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமணி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும், நடராசா பாக்கியம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், சோதி மலரின் அன்புக் கணவரும், அமரர் சபாரத்தினம், அமரர் துரைராசா, சிவபாலன், அமரர் ஞானசேகரம், குலசேகரம் அருந்தவமலர், சிவனேசன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.12.2025) வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தொட்டிலடி, சங்கானை.**
**076 388 5443**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

(CS 30916) A

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சுப்பர்மடம்...

அவதானித்து. அது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார். அந்தப் பொதியை மீட்டுச் சோதனை செய்தபோது அதற்குள் கஞ்சா இருப்பது தெரியவந்தது. அந்தப் பொதி 59 கிலோ எடையுள்ளது என்றும், கடத்தலின்போது கடலில் போடப்பட்ட நிலையில் கரையொதுங்கியிருக்கலாம் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர். (அ-ம-100)

## ஈழ - தமிழக...

இது தொடர்பில் பேரவையால் வழங்கப்பட்ட மனுவில் உள்ளதாவது:-

ஈழத்தமிழர்கள் தங்களின் தொப்புள் கொடி உறவுகளாக தமிழக மக்களை காலாதிகாலமாக நேசித்து வருகின்றார்கள். எனினும், கடந்த பல தசாப்தங்களாக இரு தரப்பு மீனவர்களுக்கும் இடையில் எல்லை தாண்டிய மீன்பிடி தொடர்பான பிணக்குகள் நீடித்து வருவது கவலைக்குரியதும் முற்றுப்புள்ளி வைக்கப்பட்ட வேண்டியதுமான பிரச்சினையாகும். ஏனெனில் இருபுறமும் இதில் சம்பந்தப்படுவதும் பாதிக்கப்படுவதும் தமிழ் மீனவர்களே. இலங்கை அரசாலும் இலங்கைக் கடற்படையாலும் கட்டமைக்கப்பட்ட ரீதியில் இனவழிப்புக்கு உள்ளாகி வருகின்ற ஈழத் தமிழ் மீனவர்கள், தமிழக மீனவர்களின் எல்லை தாண்டிய மீன்பிடி நடவடிக்கைகளால் பொருளாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டு மீண்டெழ முடியாத நிலைக்குள் தள்ளப்படுகின்றார்கள்.

இந்தப் பிரச்சினையை இலங்கை அரசு தனக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி வருகின்றது. இவ்வாறே தமிழகத்தையும் ஈழத் தமிழர்களையும் நிரந்தர பகையாளிகளாக மாற்றும் முயற்சிகளும் தொடர்ந்தும் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. இந்தப் பிரச்சினையை வாய்ப்பாகப் பயன்படுத்தி ஈழத் தமிழர்களதும் இந்தியாவினதும் தமிழகத்தினதும் நலன்களுக்கு முரணான வெளிச்சக்திகள் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் காலூன்றி பலமடைந்து வருகின்றார்கள்.

எனவே, தீர்வின்றி நீடித்துவரும் எல்லை தாண்டிய மீன்பிடியை கட்டுப்படுத்தவும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக்காணவும் தமிழக அரசின் தலையீடு உடனடியாக அவசியம் - என்றுள்ளது. (அ-ம-26-66)

## நாட்டின்...

மேலும் தெரிவித்ததாவது:-

பேரிடர் நிலையால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என அச்சமூட்டும் அறிவிப்புகளை சிலர் வெளியிட்டு வருகின்றனர். அவ்வாறு நடக்காது. இருந்ததைவிட சிறப்பாக இலங்கை மீண்டெழும். அந்த நம்பிக்கை எமக்கு உள்ளது.

அதேவேளை, நெருக்கடியான காலகட்டத்திலும் நாம் சுற்றுலாத்துறையை கைவிடவில்லை. சுற்றுலாப் பயணிகளை அழைத்துவரும் வேலைத்திட்டம் முறையாக முன்னெடுக்கப்பட்டது.

டிசெம்பர் மாதத்தின் முதல் 10 நாள்களுக்குள் 93 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இவ்வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் 22 லட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் - என்றார். (அ-ம-44)

## தொல். திணைக்...

தால் எல்லைக் கற்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினமும், அதன் தொடர்ச்சியாக நேற்றும் இந்த எல்லைக் கற்களை அமைக்கும் பணிகள் இடம்பெற்றுள்ளன. வீரசிங்கம் மண்டபத்துக்கு முன்பாக உள்ள தமிழாராய்ச்சிப் படுகொலை நினைவேந்தல் தூபியையும் உள்ளடக்கியே இந்த எல்லைக் கற்கள் அமைக்கப்பட்டுள்ளன. (அ-ம-17)

## துப்பாக்கிச்...

பட்டுள்ளார். கல்லாறு பகுதியில் இருந்து மணலைக் கொண்டுசென்ற டிப்பர் மீதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. டிப்பரை பொலிஸார் இடைமறித்தபோது, சாரதி பொலிஸாரின் அறிவுறுத்தலுக்குப் பணியாமல் தொடர்ச்சியாகப் பயணித்துள்ளார். இதையடுத்தே, டிப்பர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. டிப்பர் குடைசாய்ந்ததைத் தொடர்ந்து, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-113)

## அளவுக்கு...

நேற்று உயிரிழந்துள்ளார். வீட்டின் அறையில் கதிரையில் அமர்ந்தவாறு மயக்க நிலையில் இருந்த அவரை, குடும்பத்தினர் மீட்டு மருத்துவமனையில் சேர்ந்தபோது, அவர் முன்னரேயே உயிரிழந்துவிட்டதை மருத்துவர்கள் உறுதிப்படுத்தினார்கள். உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, அளவுக்கு அதிகமான ஹெரோய்ன் நுகர்வு காரணமாகவே இறப்புச் சம்பவித்ததாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

குறித்த நபர், ஹெரோய்ன் வழக்கொன்றில் விளக்கமறியலில் வைக்கப்பட்டு, மூன்று தினங்களுக்கு முன்னரே விடுவிக்கப்பட்டிருந்தார். இவ்வாறான நிலையிலேயே, ஹெரோய்ன் பாவனை காரணமாக உயிரிழந்துள்ளார். (அ-ம-26)

## தையிட்டி...

வேற்றப்பட்டுள்ளது. வலி. வடக்குப் பிரதேசசபை அமர்வு தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது, தையிட்டி திஸ்ஸ விகாரைக் கட்டம் முறையான அனுமதி பெறப்பட்டு அமைக்கப்படாத காரணத்தால், அந்த விகாரையை 'சட்டவிரோதக் கட்டம்' என்று பிரகடனப்படுத்தி, மும்மொழிகளிலும் அறிவித்தற் பலகையை வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் ப.சாருஜன் முன்மொழிவைச் சமர்ப்பித்தார். இந்த முன்மொழிவு ஏகமனதாக ஏற்கப்பட்டு, தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. (அ-ம-26)

## தேரரின்...

வழங்குவதற்கு, வலிகாமம் வடக்கு பிரதேசசபையில் நேற்றுக் கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டதுடன் உறுப்பினர்களால் போராட்டம் நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பௌத்த மரபுகளின் அடிப்படையில், இலங்கையின் மாபெரும் வம்சங்களில் ஒன்றாக அறியப்படும் அமரபுர ஸ்ரீ கல்யான வம்சக் குழுவின் வடஇலங்கை தலைமைச் சங்கநாயக்கராக தையிட்டி திஸ்ஸ விகாரையின் விகாராதிபதி தெரிவாகியுள்ளார். அவரிடம் அதிகாரங்களைக் கையளிக்கும் நிகழ்வு, எதிர்க்கட்சித் தலைவர் சஜித், புத்தசாசன, சமயம் மற்றும் கலாசார அமைச்சர் சுனில் செனவி ஆகியோரின் இணைத் தலைமையில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் வலி. வடக்கின் நேற்றைய அமர்வில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன்போது, ஜின் தோட்டை நந்தாராம தேரரிடம் அதிகாரங்களைக் குவிப்பதற்கு சபையால் கண்டனம் தெரிவிக்கப்பட வேண்டும் என்று உறுப்பினர் ப.சாருஜன் முன்மொழிவைச் சமர்ப்பித்தார். இந்த முன்மொழிவு ஏகமனதாக ஏற்கப்பட்டு கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை திஸ்ஸ விகாரைக்கு முன்பாகப் போராட்டம் நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. பொதுமக்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-ம-26)

## நாட்டின்...

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-

வங்காள விரிகுடாவில் இலங்கைக்கு தென்கிழக்காக உருவாகிய காற்றுச் சுழற்சி வட மேற்கு திசைநோக்கி நகர்ந்து தற்போது இலங்கைக்குத் தெற்கு மற்றும் தென்மேற்குத் திசையில் நிலைகொண்டுள்ளது. இதன் நகர்வு வேகம் எதிர்பார்த்ததை விடக் குறைவாகவே உள்ளது. நகர்வு வேகம் குறைவென்பதால் அது மழைவீழ்ச்சி நாள்களை நீடிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அதேபோல இலங்கையின் தென்பகுதியில் ஒரு வளிமண்டல உறுதியற்ற தன்மையும் நீடிக்கின்றது. இதன் காரணமாக மட்டக்களப்பு, அம்பாறை, கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, பொலன்னறுவை, அனுராதபுரம், இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களுக்கு நாளை 20ஆம் திகதி இரவு வரை கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது.

எனினும், இன்றுமுதல் வடக்கு மாகாணத்துக்கு மழை குறைவடையும் - என்றுள்ளது. (அ-ம-26)

## வடக்கு - ...

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாயத்துக்கான ஆய்வமைப்பு, இலங்கையில் ஏற்பட்ட அழிவுகள் தொடர்பில் விசேட அறிக்கை வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையிலேயே, தமிழர் தாயகத்தில் அதிகபட்சமான விவசாய அழிவுகள் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அதிகபட்சமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் 36 ஆயிரத்து 189 ஹெக்ரேயர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் உள்ளதாவது:-

நாட்டின் பல மாவட்டங்களில் நெற்பயிர், காய்கறிகள் மற்றும் பிற மேட்டுநிலப் பயிர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் பிரதான உணவான நெற்பயிர்ச் செய்கையே அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆயிரக்கணக்கான ஹெக்ரேயர் வயல் நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகபட்சமாக 36 ஆயிரத்து 189 ஹெக்ரேயர் வயல் நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. திருகோணமலையில் 22 ஆயிரத்து 155 ஹெக்ரேயர் நிலப்பரப்பு சேதமடைந்துள்ளது. அநுராதபுரத்தில் 15 ஆயிரத்து 237 ஹெக்ரேயர் வயல் நிலங்களும், குருநாகலில் 10 ஆயிரத்து 775 ஹெக்ரேயர் வயல் நிலங்களும், புத்தளத்தில் 10 ஆயிரத்து 803 ஹெக்ரேயர் வயல் நிலங்களும் பாதிக்கப்பட்டுள்ளன - என்றுள்ளது. (அ-ச-இ)

## ஏக்கிய...

வலியுறுத்தியுள்ளனர். ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புதிய அரசியலமைப்பை உருவாக்கும் பணிகளை துரிதப்படுத்தியுள்ளது. இந்த அரசியலமைப்பு ஒற்றையாட்சிக் கட்டமைப்பை இறுக்கமாகப் பாதுகாக்கின்றது என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்தார். இதன் தொடர்ச்சியாகவே, அவர் தலைமையில் தமிழ்த் தேசியப் பேரவையினர் தமிழக முதல்வர் ஸ்டாலினைச் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது பேரவையினர் தமிழக முதல்வரிடம் தெரிவித்ததாவது:-

பொருளாதார ரீதியாகப் பின்னடைவைச் சந்தித்துள்ள இலங்கை அரசாங்கம், இந்தியாவின் பங்களிப்பின்றி வளர்ச்சியடைய முடியாது. தமிழகத்தோடு பொருளாதார ரீதியில் நெருக்கமான உறவையும் தொடர்பாடலையும் உருவாக்காமல் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியென்பது சவாலாகவே இருக்கும். ஆதலால், இலங்கை மீது கணிசமான அழுத்தத்தை ஏற்படுத்தி, தமிழர்கள் விரும்பும் தீர்வை இந்தியாவால் சாத்தியமாக்க முடியும்.

ஆதலால், இலங்கை அரசின் மீது அழுத்தத்தைப் பிரயோகித்து, ஏக்கிய இராச்சிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், புதிய அரசாங்கம் உருவாக்கவுள்ள அரசியலமைப்பில் தமிழ்த் தேசத்தின் தனித்துவமான இறைமையின் அடிப்படையில், சுயநிர்ணய உரிமையை அனுபவிக்கக் கூடிய சமஷ்டி முறைமை உருவாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தமிழக அரசு இந்திய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் - என்றனர்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், அந்தக் கட்சியின் பேச்சாளர் சுகாஷ் கனகரத்தினம், கொள்கைப் பரப்புச் செயலாளர் நடராஜா காண்டீபன், தேசிய அமைப்பாளர் த.சுரேஷ் ஆகியோர் பங்கேற்றிருந்தார்கள். அத்துடன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவனும் உடனிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புயல் பாதித்த நாட்டை மீட்க மாகாணத் தேர்தல் அவசியம்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்து

**கிளிநொச்சி,டிசெ.19**

**டித்வா புயலால் அழிவடைந்த நாட்டை மீளக்கட்டியெழுப்ப, மாகாணசபைத் தேர்தலை விரைவாக நடத்தி, அரசாங்கம் மக்கள் பிரதிநிதிகளுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியில் நடத்திய ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் இடம்பெற்ற பேரிடரின் பின்னர் இந்தியா உட்பட பல்வேறு நாடுகள் உதவி புரிந்தாலும், முழுநாட்டையும் கட்டியெழுப்பமுடியாது.

விவசாயம் மற்றும் பெருந்தெருக்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு பலகோடி ரூபா நிதி தேவை. அரசாங்கம் அன்பளிப்புச் செய்வோர் மாநாட்டை நடத்தவுள்ளதாக அறிகின்றோம்.

வரவு-செலவுத்திட்டத்தில் மாகாணசபைத் தேர்தலுக்கு அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

எனவே தேர்தலை விரைவாக நடத்தி மக்கள் பிரதிநிகளிடம் அதிகாரங்களைக் கையளித்தால், மாகாணசபைகள் மூலம் புனருத்தான வேலைகளை மேற்கொள்ளமுடியும்.

புலம்பெயர்ந்தோர் மூலமும் உதவிகள் கிடைக்க வாய்ப்புள்ளது. எனவே அரசாங்கம் மாகாணசபைத் தேர்தலை நடத்தி, அதிகாரங்களை மக்கள் பிரதிநிதிகளிடம் கையளித்தால் மாத்திரமே இடர் பாதிப்பிலிருந்து நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்-என்றார். (சு-113)

# இப்படி வீதி இருப்பின் எப்படிப் பயணிப்பது?



## பளை மீள்குடியேற்ற மக்கள் அவதி

பளை இந்திராபுரம் கிராமத்திலுள்ள கிரவல் வீதிகள் சேறும் சகதியுமாக மாறி போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் காணப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். இந்தக் கிராமத்தில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பின்னர் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்ட நிறுவனத்தினால் வீதிகள் கிரவல் வீதிகளாக அமைக் கப்பட்டன. டித்வா புயலின் பின்னர் வெள்ளம்தேங்கியுள்ள இந்தவீதிகளினூடாக கனரக வாகனங்கள் செல்வதால் வீதிகளின் பல இடங்களில் குழிகள் ஏற்பட்டு சேதமடைந்து போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. எனவே அதிகாரிகள் குறித்த வீதிகளினூடான போக்குவரத்தை இலகுபடுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-41-9)

# பாதிப்புற்ற மன்னார் வீதிகள்; அமைச்சர் பிமல் ஆராய்வு!

மன்னார் மாவட்டத்தில் டித்வா புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீதிகளின் புனரமைப்புப் பணிகள் தொடர்பில், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் ஆராயப்பட்டுள்ளது.

குஞ்சுகுளம் வீதி, முள்ளிக்குளம் - பள்ளமடு வீதி,பரப்புக்கடந்தான் வீதி ஆகிய வீதிகளுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின்கீழ் உள்ள வீதிகள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பொறுப்பிலுள்ள வீதிகள் மற்றும் உள்ளூராட்சிச் சபைகளின்கீழ் பராமரிக்கப்படும் வீதிகள் உள்ளிட்டவை தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன. இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறையில் உள்ள வீதி அபிவிருத்தித் திட்டங்கள், அடுத்த ஆண்டில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்ட புதிய வீதித் திட்டங்கள், அவற்றுக்கான தேவையான நிதி ஒதுக்கீடுகள், பணிகள் ஆரம்பிக்கவேண்டிய காலம் மற்றும் செயற்படுத்தும் அதிகாரபூர்வ நிறுவனங்கள் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டன. கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன், மாவட்டச் செயலர் க.கனகேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர், மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பணிப்பாளர், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (சு-56)



# ஒலுமடுக்குளம் உடைப்பு; 150 விவசாயிகள் பாதிப்பு

தொடர் மழையால் ஒட்டுசுட்டான் ஒலுமடுக்குளம் உடைப்பெடுத்துள்ளது. இதனால் குளத்தின்கீழ் செய்கை பண்ணப்பட்டுள்ள 150 விவசாயிகளின் 280 ஏக்கர் பெரும்போக நெற்செய்கை எதிர்வரும் நாள்களில் நீரின்றி பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுதொடர்பில் விவசாயிகள், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனிடம் முறையீடு செய்துள்ளனர்.

இதனையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் குறித்த பகுதிக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை ஆராய்ந்து, பெரும்போக நெற்செய்கைகளைப் பாதுகாக்கும் நோக்கில், குளக்கட்டை தற்காலிகமாகச் சீரமைப்புச் செய்து, நீரைச் சேகரிப்பதற்குரிய வேலைகளை முன்னெடுப்பது தொடர்பில் கமநல சேவை நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தருடன் கலந்துரையாடினார். தொடர்மழை பெய்து வருவதால் தற்போது தற்காலிமாகச் சீரமைப்பு வேலைகளை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுகின்றது என்று அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். எனவே தொடர்ச்சியாக மூன்று நாள்கள் மழையற்ற வானிலை நிலவினால், ஒப்பந்ததாரருடன் கலந்துரையாடி, விரைவாக குளக்கட்டை தற்காலிகமாகச் சீர்செய்வதற்குரிய ஏற்பாட்டை முன்னெடுப்போம் என்று கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்துள்ளார். (சு-246)

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 03 . 06 . 1954



மறைவு 17 . 11 . 2025

கடந்த 17.11.2025 அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

**சிவபாலசிங்கம் இராசகுலநாயகி**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி ஊடாகவும் இரங்கல்கள் தெரிவித்த அனைவரிற்கும் எமது குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு நாளை (20.12.2025) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் ஆவரங்கால் சிவசக்தி மணி மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிச்சடங்கில் பங்குபற்றிய அனைவரையும் அழைப்பிதழ் கிடைக்கப்பெறாதபட்சத்திலும் வந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பயிற்றோலை,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

குடும்பத்தினர்.
077 861 8834, 077 286 3200

(CR 46721) E

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.12. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.